## மகாராஷ்டிரத்தில் மராட்டியைத் தவிர வேறு எந்த – மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல என்னும்

# முதலமைச்சர் பட்னாவிஸின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, ஏப்.22-

தேசிய கல்விக் கொள்கையின் கீழ், மகாராஷ்டிரத்தில் மராட்டியம் தவிர வேறு எந்த மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல எனும் அம்மாநில முதலமைச்சர் பட்னாவிஸ் அவர்களின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறதா என்று சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மகாராஷ்டிரத்தில் இந்தியைக் கட்டாய மூன்றாவது மொழியாகத் திணித்ததற்காகக் கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், மகாராஷ்டிர மாநிலத்தில் மராட்டி மட்டுமே கட்டாய மொழி எனக் கூறுகிறார் அம்மாநில முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் அவர்கள். இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைத் திணிப்பதற்கு எதிராக, மிகப் பரவலாக மக்கள் தமது கண்டனங்களைத் தெரிவித்ததன் விளைவாக உருவான நடுக்கத்தின் வெளிப்பாடு தான் அவரது இந்தப் பேட்டி.**

**இந்நிலையில், பிரதமர் அவர்களும் ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களும் பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்திட வேண்டும்:**

**தேசிய கல்விக் கொள்கையின்கீழ், மகாராஷ்டிரத்தில் மராட்டியைத் தவிர வேறு எந்த மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல எனும் பட்னாவிஸ் அவர்களின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறதா?**

**எனில், தேசிய கல்விக் கொள்கையின்படி, மூன்றாவது மொழியைப் பயிற்றுவிப்பது கட்டாயமல்ல என்று தெளிவான வழிகாட்டுதலை ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் வழங்குமா?**

**மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக அநியாயமாக தமிழ்நாட்டுக்குத் தராமல் நிறுத்தி வைத்திருக்கும் 2,152 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு விடுவிக்குமா?**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தி.மு.க. தலைமையிலான பொற்கால ஆட்சியே தொடரட்டும் என்கிற மனநிலையில் வாக்காளர்கள்!

# பா.ஜ.க.வின் ஜம்பம் தமிழகத்தில் ஒருபோதும் பலிக்காது!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஏப். 22 -

தி.மு.க. தலைமையிலான பொற்கால ஆட்சியே தொடரட்டும் என்கிற மனநிலையில் வாக்காளர்கள் இருக்கும் நிலையில் பா.ஜ.க.வின் ஜம்பம் தமிழகத்தில் ஒருபோதும் பலிக்காது என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. அது வருமாறு:




இந்தித் திணிப்பு என்ற வைரஸை, அண்ணா காலம் தொட்டு தி.மு.க. எதிர்த்து போராடி வருகிறது. இந்தித் திணிப்பு என்ற அஸ்திரத்தை ஒன்றிய அரசு நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொள்ளும் போது தி.மு.க. அதை துணிந்து எதிர்த்து போராடியுள்ளது. மராட்டிய மாநிலத்தில் சிவசேனா போன்ற கட்சிகள் கூட பாராட்டும் அளவுக்கு இந்தி எதிர்ப்பில் தி.மு.க. தனது பங்களிப்பை செய்து வருகிறது. சமீபத்தில் தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் மக்கள் தொகையை கணக்கில் கொண்டு தமிழ்நாட்டின் தொகுதிகளை குறைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போதும் முதல் ஆளாக களம் இறங்கியது தி.மு.க.தான். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்த மறுசீரமைப்பில் பாதிப்புக்குள்ளாகும் கேரளம், தெலுங்கானா, கர்நாடகா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களையும் கைகோர்த்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குரல் எழுப்பினார். மக்கள் தொகை பெருக்கம் என்ற நெருக்கடியை, மனிதவள ஆற்றல் என சாதகமாக மாற்றிய தமிழ்நாட்டிற்கு இப்படியொரு தண்டனையா என அவர் எழுப்பிய கேள்வி ஒன்றிய அரசையே உலுக்கியது. மறுசீரமைப்பு என்ற பெயரில் மக்கள் தொகையை காரணம் காட்டி தொகுதிகளை குறைத்தால், இந்தியாவின் வருங்காலங்களில் பன்மடங்கு பெருகவே வழிவகுக்கும்.

நீட் தேர்வு என்னும் அரக்கன் தி.மு.க. ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டிற்குள் கால் பதிக்கவே இல்லை. அ.தி.மு.க. ஆட்சியில்தான் நீட் தேர்வு திணிக்கப்பட்டது. பதவியை காப்பாற்ற, அ.தி.மு.க. தலைவர்கள் ஒன்றிய அரசின் கைப்பாவையாக அப்போது மாறி போனார்கள். ஆரியத்திற்கு முந்தைய பண்பாடாக காட்சியளிக்கும் திராவிடத்தை ஆய்வு பூர்வமாகவும், அறிவியல் பூர்வமாகவும் நிலைநாட்ட இப்போது தி.மு.க. முயற்சி எடுத்து வருகிறது. அதற்காக சிந்து சமவெளி நாகரீக இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்களை புரிந்து கொள்ள வழிவகை செய்வோருக்கு ஒரு மில்லியன் டாலர் பரிசுத் தொகையையும் முதல்வர் அறிவித்தார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இப்போது முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகவும் உள்ளது. ரூ.10 லட்சம் கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, பொருளாதாரம் முன்னேற்றத்தை நோக்கி நகர்கிறது. கூட்டணி கட்சிகளின் ஆலோசனைகளை ஏற்று, தமிழ்நாட்டின் மதுபானக் கொள்கையை மாற்றவும், போதை பொருட்களின் பயன்பாட்டை குறைக்கவும் அரசு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரை கடந்த சில மாதங்களாகவே ஒரு பச்சையான பா.ஜ.க. காரராக தன்னை அறிமுகப்படுத்தி கொண்டு செயல்படும் கவர்னர் ஆர்.என்.ரவி அரசு ஏற்றிய சட்டங்களை முடக்கியபோது, அதையும் சுப்ரீம் கோர்ட் வரை சென்று தமிழ்நாட்டின் உரிமையை முதல்வர் நிலைநாட்டியுள்ளார். ஒரு தபால்காரரின் பணியை மட்டுமே கவர்னர் மேற்கொள்ள வேண்டும் என்ற அவரது அதிகாரத்தை வரையறுத்ததும் தமிழ்நாடு தான்.

இந்நிலையில் வெறுப்பு அரசியலை விதைத்து வரும் ஒன்றிய அரசு, தனது கடந்த கால கைப்பாவையான அ.தி.மு.க.வோடு மீண்டும் கூட்டணி வைத்து கொண்டு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் என்ற கோஷத்தை முன்வைக்கிறது. அ.தி.மு.க. பாஜ கூட்டணி தமிழகத்திற்கு ஏற்கனவே இருமுறை தொடர்ச்சியாக தோல்வி அடைந்த கூட்டணிதான்.

ஒரு மாறுதலுக்காக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இருவரும் தனித்தனியே நிற்பது போல் கள்ள கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தனர். அப்போதும் தோல்வியே கிட்டியது. வாக்காளர்கள் தி.மு.க. தலைமையிலான பொற்கால ஆட்சி தொடரட்டும் என்கிற மனநிலையில் இருக்கும்போது, பா.ஜ.க.வின் ஜம்பம் தமிழகத்தில் ஒருபோதும் பலிக்காது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புழல் எம். நாராயணன் முன்னிலையில் வி. ஆர். குப்பன் தலைமையில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் நீர் மோர் பந்தல்!

## அ. சாந்தகுமார் ஏற்பாட்டில் – மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

மாதவரம், ஏப். 22-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, நீர் மோர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டம் காவாங்கரை பேருந்து நிறுத்தம் அருகே, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் அ. சாந்தகுமார் ஏற்பாட்டில் 23 அ வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் அவர்களின் தலைமையில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும், பேருந்தில் செல்பவர்களுக்கும் இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய், கிர்ணிப்பழம், நீர்மோர், குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார்

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். டி. மதன்குமார், துணை அமைப்பாளர் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், வட்டக் கழக நிர்வாகிகள் ராமச்சந்திரன், உசேன் மொய்தீன், சுதாகர், அம்மு மூர்த்தி, அறிவழகன், பார்பன், முத்துகிருஷ்ணன், பார்த்திபன், அரி,அப்துல் சமது, பகுதி அமைப்பாளர் ர. விஜய் ஆனந்த், மாதவரம் வினோத், துணை அமைப்பாளர்கள் எம். என்.அஜய் தென்னவன், ஜி. ராஜேஷ் கண்ணன், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், க. யுவராஜ்,ஏ .விஜயன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் வைலட்ராணி, பிரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நீர் மோர் பந்தல் காவாங்கரைப் பகுதியில் திறந்து பொதுமக்களுக்கு குளிர்பானங்கள் வழங்கியதற்காக, பொதுமக்களும், வியாபார பெருமக்களும் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டம், கழக முன்னோடியும், முன்னாள் அமைச்சர் ஆற்காடு நா.வீராசாமி அவர்களின் வாகன ஓட்டுநர் பொன்.கண்ணபிரானின் படத்திறப்பு நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கலந்து கொண்டு படத்தினை திறந்து வைத்தார். இதில் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, பகுதிச் செயலாளர்கள் ச.பரமசிவம், ந.இராமலிங்கம் எம்.சி, மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி, க.கோவிந்தராஜ், சி.பி.திருமலை, ஆ.ஏகாம்பரம், கு.பாபு, பி.சந்திரசேகர், கே.பி.சுரேந்தர், டி.சம்மந்தா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## முதல்வர் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியில்

# ரூ.324 கோடி செலவில் 79 திருமண மண்டபங்கள்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஏப்.22-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முதல்வர் தலைமையிலான இந்த ஆட்சி அமைந்த பிறகு 324 கோடி ரூபாய் செலவில் 79 திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார்.

இது குறித்து விவாதம்:



**எம்.எச்.ஜவாஹிருல்லா:** பேரவை தலைவர் அவர்களே, என்னுடைய பாபநாசம் தொகுதி, அய்யம்பேட்டையில் தண்டாயுதபாணி திருக்கோயில் இருக்கின்றது. அந்த கோயிலில் பணி புரியக்கூடிய நிர்வாக அலுவலருக்கு தனி அலுவலகம் இல்லை. சுற்றி இருக்கக்கூடிய 48 திருக்கோயில்களின் வரவு செலவு கணக்குகளும் இந்த கோயிலிலே தான் பராமரிக்கப்படுகிறது. எனவே இந்த கோயிலில் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்காக தனி அலுவலகம் அமைத்து தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** முதல்வர் திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு பல்வேறு இடங்களில் இணை ஆணையர்கள், உதவி ஆணையர்களுக்கு தனியாக அலுவலகம் கட்டப்பட்ட வருகின்றன. அதேபோல் ஆய்வாளர் நிலையில் இருக்கின்ற அலுவலர்களுக்கு 100 இடங்களில் அலுவலகங்கள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு அதில் 60 சதவீத பணிகள் நிறைவுற்றுள்ளன. உறுப்பினர் அவர்கள் கோரிய தண்டாயுதபாணி திருக்கோயில் செயல் அலுவலருக்கு அலுவலகம் கட்டுவது தொடர்பாக விரைவில் ஆய்வு செய்து சாத்திய கூறுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏதாவது ஒரு இடத்தில் நிர்வாக வசதிக்காக அந்த அலுவலகம் கட்டித் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி கே.மரகதம் குமரவேல் :** எனது மதுராந்தகம் தொகுதியில் திருமலை வையாவூரில் அமைந்துள்ள பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற நரசிம்ம மன்னரால் கட்டப்பட்டது. கடந்த வருடம் குடமுழுக்கு நடைபெற்றது. இத்திருக்கோயிலுக்கு ஒரு தனி சிறப்பு உண்டு. தென்திருப்பதி என்றும் அழைப்பார்கள். திருமணம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் கோயில்களில் நடைபெறுவதால் பக்தர்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதியில் திருமண மண்டபம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** முதல்வர் அவர்கள் தலைமையில் இந்த ஆட்சி அமைந்த பிறகு சட்டமன்ற அறிவிப்பின்படி 324 கோடி ரூபாய் செலவில் 79 திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று இன்னார் இனியவர் என்ற பாகுபாடு இல்லாமல் திருமண மண்டபங்கள் மற்றும் இதர மண்டபங்கள் 26 மண்டபங்கள் கட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த திருக்கோயிலை உடனடியாக ஆய்வு செய்து எவ்வளவு திருமணங்கள் நடக்கிறது என்பதை கணக்கிட்டு பெரிய அளவில் இல்லை என்றாலும் உறுப்பினர் வைத்த கோரிக்கை நிறைவேற்றுகின்ற வகையில் ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்கு இந்த ஆண்டு பணிகள் துவக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி. கிருஷ்ணமுரளி :** 2019-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் தென்காசி, திருநெல்வேலி என இரண்டாக பிரிக்கப்பட்டது. ஏற்கனவே இணை ஆணையர் அலுவலகம் இரண்டுக்கும் சேர்த்து திருநெல்வேலியில் இருந்தது. மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு அறநிலையத்துறையின் இணை ஆணையாளர் அலுவலகம் தூத்துக்குடி மாவட்டத்திற்கு சென்றுவிட்டது. அதனால் 120 கிலோமீட்டர் தொலைவில் போய்வர மக்கள் சிரமப்படுகிறார்கள். அதனால் இணை ஆணையர் அலுவலகம் தென்காசி மாவட்டத்தில் தனியாக இயங்குவதற்கு அமைச்சர் ஆவண செய்வாரா என்பதை கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** இந்து சமய அறநிலையத்துறையின் மானிய கோரிக்கைக்கு முன்பு முதல்வர் அவர்கள் துறை சார்ந்த ஆய்வினை மேற்கொள்ளுகின்றபோது வேலூர் மண்டலம் அதிக பரப்பளவை கொண்டதாகவும், 905 திருக்கோயில்கள் அடங்கியுள்ளதாலும் அதை இரண்டாக பிரிப்பதற்கும், அதேபோல் தர்மபுரி மாவட்டம் வெகு தூரத்தில் அதிக பரப்பளவில் 1,151 திருக்கோயில்களை கொண்ட மாவட்டமாக இருப்பதால் அதையும் பிரிப்பதற்கும், திருநெல்வேலி மண்டலமும் அதேபோல் பிரிக்க வேண்டி உள்ளதாலும் அது குறித்த கருத்துருவும் வந்துள்ளது என்பதனை தெரிவித்தோம். அதனடிப்படையில் வெகுவிரைவில் முதலமைச்சர் அவர்கள் அதனை அறிவிக்க இருக்கின்றார்கள். அந்த மாவட்டம் 2019 அறிவிக்கப்பட்டது என்றாலும் இரண்டு ஆண்டுகள் இடைவெளி இருந்தது. இருந்தாலும் பரவாயில்லை உறுப்பினர் அவர்கள் கோரிய இணைய ஆணையர் அலுவலகத்திற்கு சரியாக இடத்தினை தேர்வு செய்து நிச்சயமாக அதற்குண்டான கட்டடத்தை கட்டுவதற்கு இந்த ஆண்டுக்குள்ளாக கட்டுமான பணிகள் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம்.பிரபாகரன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, எனது பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 1000 ஆண்டுகள் பழமையான வாலிகண்டபுரம் வாலீஸ்வரர் திருக்கோயில், திருவாலந்துறை தேளீஸ்வரர் திருக்கோயில், அதேபோல காரியானூர் ஆதி தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில் ஆகிய மூன்று கோயில்கள் பழமையான கோயில்களாகும். அதிகமான திருமணங்கள் நடைபெறுகின்ற கோயில்கள் என்பதால் நீண்ட காலமாக திருப்பணி செய்யாமல் குடமுழுக்கு செய்யாமல் இருக்கிறது. எனவே இந்துக்களின் பாதுகாவலராக விளங்கிகொண்டிருக்கின்ற ஆன்மீக ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற நமது தமிழக முதல்வர் ஆட்சியிலே இந்த கோயில்களுக்கு எல்லாம் குடமுழுக்கு செய்யப்படுமா என்பதை கேட்டு அரிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் வாலீஸ்வரர், தேளீஸ்வரர், ஆதி தான்தோன்றீஸ்வரர் ஆகிய மூன்று திருக்கோயில்களும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கோயில் என்று குறிப்பிட்டார். இது ஆட்சி ஏற்பட்ட பிறகு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் என 714 திருக்கோயில்கள் வகைப்படுத்தப்பட்டு அதில் 274 திருக்கோயில்களுக்கு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஆண்டிற்கு ரூ.100 கோடி வீதம் மூன்றாண்டுகளுக்கு ரூ.300 கோடியும், இந்தாண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.125 கோடியும் அரசின் சார்பில் மானியமாக வழங்கி இருக்கின்றார். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரை வழங்கப்பட்ட அரசு மானியத் தொகை மட்டும் ரூ.425 கோடியாகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நம் மன்னர்கள் விட்டுச் சென்ற பொக்கிஷத்தை பாதுகாக்க வேண்டும் என்று இன்றைய மாமன்னர் நம்முடைய முதல்வர் அவர்கள் சுமார் ரூ.425 கோடி ஒதுக்கீடு செய்திருக்கின்றார். இதுவரையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட 52 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவுற்றுள்ளது. அதில் ஒரு கோயிலான யுனெஸ்கோ விருது பெற்ற துக்காச்சி ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு நேற்றைய தினம் நானும், உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் அவர்களும் சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தோம். இப்படி வரலாற்றில் சிறப்பாக பதிவிடக்கூடிய அளவிற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் கோரிய திருக்கோயில்கள் அந்த பட்டியலில் இடம் பெற்றிருக்கும். அத்திருக்கோயில்களுக்கு திருப்பணிகளை மேற்கொண்டு விரைவாக குடமுழுக்கு நடைபெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# திருத்தணியில் சட்டக்கல்லூரி அமைத்திடுவீர்!

## பேரவையில் – திருத்தணி எஸ்.சந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.22-

சட்டப்பேரவையில் திருத்தணி தொகுதி உறுப்பினர் எஸ்.சந்திரன் கேட்ட கேள்வியும், அதற்கு அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பதிலும் வருமாறு:-

**எஸ். சந்திரன்:** திருத்தணி சட்டமன்றத் தொகுதி ஆந்திர மாநில எல்லையில் உள்ள தொகுதி. இப்பகுதி மாணவர்கள் சட்டம் பயில, LLB பயில ஆந்திர மாநிலம், திருப்பதி, புத்தூர் செல்லும் நிலை உள்ளது. நீண்டநெடுந் தூரம் சென்று கல்வி பயிலக்கூடிய நிலை உள்ளதால் திருத்தணி தொகுதியில் சட்டக் கல்லூரி அமைத்திட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ். ரகுபதி:** திருத்தணிக்கு அருகிலேயே திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூரிலே அங்கே 30 கிலோ மீட்டர் தொலைவிலே ஒரு அரசு சட்டக் கல்லூரியும், வேலூர், காட்பாடியிலே 70 கிலோ மீட்டர் தொலைவிலே ஒரு அரசு சட்டக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. எனவே, திருத்தணியிலே புதிதாக சட்டக் கல்லூரி துவங்குவதற்கான வாய்ப்புகள் கிடையாது.

**எஸ். சந்திரன்:** ஆதிக்க சக்திகளுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி தமிழ்நாட்டு உரிமைகளை நிலைநாட்டும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே திருத்தணி நகரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ADDITIONAL DISTRICT JUDGE COURT அமைத்திட உயர்நீதிமன்ற ஆய்வுக்குழு நீதிமன்றத்தை பார்வையிட்டு அதற்கான பரிந்துரையை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டது. எனவே, திருத்தணியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைத்திட அரசு முன்வருமா என சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**அமைச்சர் எஸ். ரகுபதி:** மாவட்ட நீதிபதியும், அதற்கான உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு நீதிபதியும் அதனைப் பார்வையிட்டு, இன்றைக்கு உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பியிருப்பதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உயர் நீதிமன்றக் குழு அதைப் பரிசீலித்து, அங்கு ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் தேவை இருக்கிறதென்கிற முடிவிற்கு வந்து, அதனை அரசிற்கு அனுப்புமேயானால், அதற்கு பிறகு அரசு அது குறித்து பரிசீலிக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## 117வது வார்டு மாமன்ற உறுப்பினர்

# திருமலை பொன்னுரங்கம் மகன் கோகுல் மறைவு!

## நே.சிற்றரசு – நா.எழிலன் – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஏப். 22-



சென்னை மேற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் 117வது வார்டு மாமன்ற உறுப்பினருமான திருமலை பொன்னுரங்கம் அவர்களின் மகனும் நினைவில் வாழும் பொன்னுரங்கம் அவர்களின் பேரனுமான கோகுல் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள். அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று 22-04-2025 மாலை 3.00 மணி அளவில் அவரது இல்லம் அமைந்துள்ள நம்பர் 16 சோலையப்பன் தெரு தி.நகர் சென்னை17ல் புறப்படும் என தெரிவித்துக் கொள்கிறோம்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.ரூபேஷ் ஏற்பாட்டில் ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் நீர்மோர் பந்தலை மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் ரோஸ்மில்க், தர்பூசணி, முலாம்பழம், வெள்ளரிகாய், கீரை, இளநீர், போன்றவை வழங்கினார். இந்நிகழ்வில் கே.தமிழ்வாணன், எம்.ஜெகன், எம்.எஸ்.மணிகண்டன், மு.கீதாராமன், ரவி, அன்பு, பத்மநாபன், சந்திரன், கலைவாணன், ஜெயபால், பாஸ்கர், வேணு, பிரேமா, கவின், தீபக், பிரகாஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.